நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## MC. No.9 /2024

## P.W.3 –ன் வாக்குமூலம்

**(மனுதாரர்தரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | செல்வம் |
| தந்தை / கணவர் பெயர் | : | கருப்பண்ணன் |
| கிராமம் | : | பெருமானூர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW3 |
| வயது | : | 47 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2026–ஆம் வருடம், ஜுலை மாதம், 10–ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**இருதரப்பினரும் ஆஜர். அவர்களது வழக்கறிஞர் ஆஜர்.**

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.40

1. நான் பெருமானூரில் குடியிருக்கிறேன். 1 ம் எதிர்மனுதாரர் சுரேஷ்குமார் குட்டப்பட்டி ஊரைச்சேர்ந்தவர். நான் படிக்கவில்லை. நான் தாக்கல் செய்த உறுதிமொழி ஆவணத்தில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியும். நான்

தாக்கல் செய்த உறுதிமொழி ஆவணத்தில் தனலட்சுமிக்கு யாருடன் முதலில் திருமணம் ஆனது என்பதுப்பற்றி நான் சொல்லவில்லை.

2. நான் தாக்கல் செய்த உறுதிமொழி ஆவணத்தில் தனலட்சுமிக்கு முதல் திருமணம் விவாகரத்து எந்த வருடம் ஆனது என்று நான் சொல்லவில்லை. பத்திரம் எழுதி பிரிந்துக்கொண்டது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அவ்வாறு பத்திரம் எழுதி பிரிந்துக்கொண்டது பற்றி யார் என்னிடம் சொன்னார்கள் என்று நான் தாக்கல் செய்த உறுதிமொழி ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

3. ஆஜர் எதிரிமனுதாரர் சுரேஷ்க்கும் மனுதாரர் தனலட்சுமிக்கும் எந்த தேதியில் திருமணம் ஆனது என்று எனக்கு தெரியாது. மனுதாரர் தனலட்சுமி எனக்கு என்ன உறவு என்றால் எனது பக்கத்துக்காட்டுகாரர். சுரேஷ் வீட்டுக்கு தற்போதுவரை நான் போனதில்லை. மனுதாரருக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் என்ன பிரச்சனை என்று எனக்கு நேரடியாக தெரியாது. சொல்லித்தான் தெரியும். யார் சொல்லி தெரியும் என்றால் தனலட்சுமியின் அண்ணனும், தம்பியும் சொல்லிதான் எனக்கு தெரியும்.

4. 1ம் எதிர்மனுதாரர் சுரேஷ்யிடம் இதுசம்மந்தமாக போனில் ஒருமுறை பேசியுள்ளேன். எப்பொழுது பேசினேன் என்று எனக்கு சரியாக நியாபகம் இல்லை. அவருடைய போன் நெம்பர் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்த உறுதிமொழி ஆவணத்தில் நீதிமன்ற நடவடிக்கைகள் பற்றி நான் எதுவும் சொல்லவில்லை. இருவருக்கும் இடையே நான் பஞ்சாயத்து எதுவும் பேசவில்லை.

5. நான் அழைப்பாணையின் பேரில் ஆஜராகி சாட்சியம் அளிக்கவில்லை. மனுதாரரின் சகோதரர் அழைத்ததன் பேரில்தான் ஆஜராகி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். மனுதாரருக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது என்றாலும் மனுதாரரின் அண்ணன் அழைத்ததன் பேரில், அவர்கள் தயாரித்து வைத்திருந்த உறுதிமொழி ஆவணத்தில் கையெழுத்து செய்துவிட்டு அதிலுள்ள விவரங்கள் தெரியாமல்

மனுதாரருக்கு  ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 12.45 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்து படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**